DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
---
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, YERCAUD
DATE : 17.07.2025.

| | | |
|---|---|---|
| Case No. | : | CC. No.14/2024 |
| Deposition of Witness for Prosecution | : | PW.1 |
| Name | : | ராமசந்திரன் |
| Father Name | : | குப்பன் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | xxxx |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Deposition of witness for prosecution side solemnly affirmed by Tr. E. Govindharasu, Grade III Bench Clerk, of this court, on 17.06.2025 in accordance with the provisions of Act 1 of 1873.

**(எதிரி ஆஜர்.)**

**<u>முதல் விசாரணை:–</u>**

நான் தற்போது சேலம் மாவட்டம், ஏற்காடு வட்டம், பிலியூர் டேங்பாடியில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். எனக்கு இரண்டு மகன்கள். விபத்தில் காயம்பட்டு இறந்துபோன தட்சணாமூர்த்தி எனது மூத்த மகன் ஆவார். எனது இளைய மகன் மனோஜ் சேலத்தில் கல்லூரி படிப்பு படித்து வருகிறார். அவரை ஏற்காட்டிலிருந்து அழைத்து வருவதற்காக எனது மகன் தட்சணாமூர்த்தி இருசக்கர வாகனத்தில் ஏற்காடு சென்றார். இளைய மகனை அழைத்துக்கொண்டு அவர்கள் திரும்பி வீட்டிற்கு வரும்போது மஞ்சக்குட்டை தாண்டி சர்ச் அருகே சென்றுகொண்டிருந்தபோது அவர்கள் சென்ற திசையிலேயே மற்றொரு இருசக்கர வாகனம் சென்றதாகவும் அந்த வாகனம் சைகை ஏதும் செய்யாமல் திரும்பி என் மகன்கள் வந்த வாகனத்தில் மோதி

விபத்து ஏற்பட்டதாக மாலை 06.00 மணிக்கு போன் மூலம் தகவல் கிடைத்தது. நான் சம்பவ இடத்திற்கு சென்று பார்த்தபோது தட்சிணாமூர்த்திக்கு தலையில் காயம் ஏற்பட்டிருந்தது. மனோஜிற்கு முதுகில் காயம் ஏற்பட்டது. 108 ஆம்புலன்ஸ் மூலமாக ஏற்காடு அரசு மருத்துவமனைக்கு கொண்டு வந்து சேர்த்தோம். அங்கு சிகிச்சையில் இருந்த எனது பெரிய மகன் சிகிச்சை பலனிற்றி இறந்துவிட்டார். இது சம்மந்தமாக காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரிலுள்ள கையொப்பம் என்னுடையது. **அந்த புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. சம்பவத்தின்போது எனது மகன் தட்சணாமூர்த்தி ஓட்டிச்சென்ற இருசக்கர வாகனத்தின் பதிவெண் 2138 ஆகும். விபத்து ஏற்படுத்திய இருசக்கர வாகனத்தின் பதிவெண் மற்றும் அதை ஓட்டி வந்த நபரின் பெயரை தெரியாது. போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரியின் தரப்பில் குறுக்கு விசாரணை:–**

சம்பவத்தை பற்றி நேரடியாக தெரியாது என்றால் சரிதான். போலீசார் எழுதி புகாரில் தான் கையெழுத்து செய்தீர்கள் என்றால் சரிதான். புகாரில் என்ன எழுதியிருந்தது என்ற விவரம் தெரியாது என்றால் சரிதான். விபத்திற்கு நஷ்டயீடு வேண்டி இப்பொய்புகாரானது எதிரியின் மீது தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல.

Taken down by me in open court in the presence of the Accused. Read over to the witness and admitted by him/her to be correct.

Sd/-.R. Elanchezhian
District Munsif-cum-Judicial Magistrate,
Yercaud.